<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 6/2020 | வா.சா. | : 1 |
| பெயர் | : ராமசாமி | த/பெ. | : வெள்ளைச்சாத்தான் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : ஒத்தினிப்பட்டி |
| தேதி | : 04.03.2024 | வயது | : 55 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:14 A.M. – 11: 54 A.M.</u>

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. இவ்வழக்கின் முழு விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரி. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் சொத்து என்னுடையதல்ல என்று பதில் போட்டுள்ளார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்துக் காண்பித்தார்கள். வழக்கு சொத்து பூர்வீகப்படியும், வாரிசு அடிப்படையிலும் எனக்கு பாத்தியப்பட்டது என்று என் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எந்த வழியில் பூர்வீகப் பாத்தியபப்ட்டது என்றும், யாருடைய வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என்னிடம் யாரும் கேட்கவில்லை, அதனால் சொல்லவில்லை, அந்த சொத்து என்னுடைய அப்பா வழியில் பாத்தியப்பட்டது.

3. என் அப்பா வழியில் பூர்வீக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் எனது அப்பா பெயரிலோ, என் தாத்தா பெயரிலோ உள்ள எந்த பட்டாவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் தாத்தா பெயர்

ராமசாமி. என் தாத்தா ராமாசாமிக்கு என் அப்பா, பூசாரி அழகன், வெள்ளக்கண்ணு ஆகியோர் மகன்கள் என்றால் சரி. மேற்படி 3 பேரும் எந்த தேதியில் பாகம்



பிரித்துக் கொண்டார்கள், எவ்வகையில் என் அப்பாவிற்கு வந்தது என்று இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி.

4. என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான் ஒரே பிள்ளைதான். என் அப்பாவிற்கு என்னை தவிர அழகம்மாள், தேனம்மாள் என்ற இரு பெண் மக்கள் உள்ளார்கள் என்றால் சரி. வழக்கு சொத்தை நானும், என் தந்தை மற்றும் என் சகோதரிகளும் பாகம் பிரித்துக் கொண்டதாக என் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் இல்லை, அவர்களுக்கும், சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. என் சகோதரிகள் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக என் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் எழுதிக் கொடுக்கவில்லை.

5. சொத்து வாரிசு அடிப்படையில் கிடைத்தது என்பதற்கு, என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. நான் வழக்கில் சொல்லியுள்ள சென்ட்ரிங் வீடு எந்த வருடத்தில் கட்டப்பட்டது என்று நான் சொல்லவில்லை என்றால் சரி. பழைய கதவு எண்.1/385ன் தற்போதைய வரி விதிப்பு எண்.9/52, மின் இணைப்பு எண்.741 என்று சொல்லியுள்ள வீடு வழக்கு சொத்தில் இல்லை, அது நத்தம் ஊர்க்குடியிருப்பில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு 1984க்கு பின்னிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை 3 கிஷ்தி ரசீதுகளை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி.

6. நான் தாக்கல் செய்துள்ள கிஷ்தி ரசீதுகளும் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, அது இவ்வழக்கு சொத்திற்குரியது அல்ல என்றால் சரியல்ல.

நான் நீண்ட காலமாக இந்த ஊரில் குடியிருக்கவில்லை, வேலை காரணமாக வெளியூருக்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, நான் இந்த ஊரில்தான்



இருந்தேன். எனக்கோ, என் தகப்பனாருக்கோ, என் சகோதரிகளுக்கோ வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் இந்த ஊரில் இல்லை என்றால் சரி. வேறு கிராமங்களிலும் எங்களுக்கு சொத்து இல்லை என்றால் சரி.

7. எங்கள் பாக சொத்துக்களை என் அப்பா அவருடைய சகோதரர்கள் பூசாரி அழகன் மற்றும் வெள்ளைக்கண்ணு ஆகியோருக்கு எழுதிக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார், அதனால் நாங்கள் பிழைப்பிற்காக வெளியூருக்கு குடி பெயர்ந்து விட்டோம் இந்த ஊரில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் பெரியப்பா பூசாரி அழகனுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. என் பெரியப்பா மகன் ராமசாமி, அவருடைய மகன் ராமசாமி ஆகியோர் வழக்கு சொத்தில் ஒரு பகுதியான தென்கிழக்கில் 14 செண்ட் நிலத்தை 01.07.2002ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள், அதே தேதியில் நடுபுறம் 14 செண்டை நாகூர் கனி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள், நாகூர்கனியின் மகள் மும்தாஜ் என்பவரிடமிருந்து பொப்பத்தான் (எ) கருப்பையா 27.08.2009ல் கிரையம் பெற்றுள்ளார், அந்த பொப்பத்தான் என்பவரிடமிருந்து 3ம் பிரதிவாதி 20.11.2009ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

8. நான் இந்த ஊரில் இல்லாததால்தான் மேற்படி கிரையங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் வழக்கு சொத்தில் வடபுறம் உள்ள 15 செண்ட்டை என் பெரியப்பாவின் பேரன் ராஜாங்கம் 09.02.2009ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார், அதை தெரிந்து கொண்டு வழக்கிற்காக மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த ஊரில் குடியிருக்க இடம் வேண்டும் என்று என் பெரியப்பா மகன் ராமசாமியிடம்

கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு சொத்தில் 5 செண்ட் மட்டும் எனக்கு ஒதுக்கிவிட்டு மற்றவற்றை அவர்கள் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை.



9. அதனால்தான் வழக்கு சொத்திற்கு எனது பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கூட்டுப்பட்டாவில் உள்ள பெயரை நீக்கம் செய்ய வேண்டி யாருக்கு, எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களுக்கு 4 மாதங்களுக்கு முன்பாக மனு கொடுத்தேன். அதுகுறித்த ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கு சொத்திற்கு கூட்டுப்பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 4 மாதங்களுக்கு முன்பாகத்தான் தெரியும்.

10. வழக்கில் கண்ட முழு சொத்தும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது, பிரதிவாதிகளை ஏமாற்றி சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள், அதில் 7 புளிய மரங்கள் இருந்தது, அதில் ஒன்றை மட்டும் தனது சொந்த தேவைக்காக வைத்துக் கொண்டு மற்றவற்றை வெட்டிவிட்டு அதில் தேங்காய் குடோன் வைத்துள்ளார் என்றால் இல்லை, அது காலியிடமாகத்தான் உள்ளது. 2ம் பிரதிவாதி கருப்பையா அவருக்கு சொந்தமான வாகனங்களை வழக்கு சொத்தில் நிறுத்தி வைத்து தேங்காய்களை கொட்டி காயவைத்து வருகிறார் என்றால் இல்லை, அவர் புறம்போக்கில்தான் நிறுத்தி வைத்துள்ளார்.

11. என் பெரியப்பா மகன் எனக்கு 5 செண்ட் கொடுத்ததால் என் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டது, அதைப் பயன்படுத்தி சொத்தை அபகரிக்க வேண்டும்

என்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொன்னதுபோல் பிரதிவாதிகள்



வழக்கு சொத்தை ஆக்கிரமிக்கவில்லை, நான்தான் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் இல்லை. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்ததாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவோ, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவோ இல்லை என்றால் நான் புகார் கொடுத்தேன், அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

12. நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொன்னதுபோல், பிரதிவாதிகள் ஆள் பலமோ, அரசியல் பலமோ கொண்டவர்கள் அல்ல, அவர்கள் விவசாய கூலி வேலை செய்து வருபவர்கள், நான் செய்த அராஜக செயல்களை பிரதிவாதிகள் செய்ததாக சொல்லி பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெரியப்பா ராமசாமி, அவரது மகன்கள் ராமசாமி மற்றும் ராஜாங்கம் வழக்கு சொத்தை கிரையம் கொடுத்த விபரத்தை இவ்வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேனா, அது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் வழக்கிற்கு பின்னிட்டுகிரையம் செய்த விபரத்தை தெரிந்து கொண்டேன், அதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

13. இவ்வழக்கிற்கு முன்பாகவே பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியும், அதனால்தான் வழக்கு சொத்தில் எனக்கு 5 செண்ட் மட்டும் போதும், மற்ற சொத்துக்களுக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை செய்யமாட்டேன் என்று என் பெரியப்பா மகன் மற்றும் அவரது வாரிசுகளுக்கு நான் உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன், அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வங்கியில்

கடன் வாங்க முயற்சித்தபோதே, கூட்டுப்பட்டாவை தனிப்பட்டாவாக மாற்ற கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே முயற்சித்தார்கள், அதனால் அப்போதே கிரையம் பற்றிய விபரங்கள் தெரியும் என்றால் இல்லை.



14. நான் வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக மேற்கண்ட விபரங்களை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் உள்ளது, எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து அத்துமால் செய்து பார்த்தால்தான் வழக்கு சொத்திற்குள் என்னென்ன உள்ளது என்ற உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல, வழக்கு சொத்து என்னுடையதுதான். இவ்வழக்கு சொத்தை கிரையம் பெற்றவர்களை விசாரித்தால் உண்மை நிலை தெரியவரும் என்றால் விசாரிக்கலாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேண்டுகோளின்படி 11.03.2024 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.03.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2024.03.06 10:19:39 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.